STC.No. 502–2024
நாள் 02.02.2026.
D.W.1 – (பீம்சிங் )
புகார்தாரர் ஆஜரில்லை. இணையவழி மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. .
புகார்தாரர் தரப்பில் **குறுக்கு விசாரணை**

நான் பி.காம். படித்துள்ளேன். நான் கடந்த 6 ஆண்டுகளாக பயர்ஒர்க்ஸ்ஸ் வேலை பார்க்கிறேன். அதற்கு முன் பைனான்ஸ் தொழில் செய்துள்ளேன். அதற்கு முன் நான் 5 ஆண்டுகள் காவல் துறையில் கான்ஸ்டபிளாக வேலை பார்த்து ராஜினாமா செய்துவிட்டேன். நான் காவல் துறையில் கூடுதல்மாவட்ட கண்காணிப்பாளருக்கு ராமநாதபுரம் கமுதியில் மெய்க்காவலராக பணி செய்து பணியில் இருந்து ராஜினாமா செய்துவிட்டேன். எனக்கு புகார்தாரரை இஸ்ரவேல் அறிமுகம் செய்தார். இஸ்ரவேல் என்னுடைய நிறுவனத்தில் வேலை பார்த்தார் என்றால் இல்லை. அவர்நிறுவன பங்குதாரர், அவர் தொகை கொடுத்திருந்தார். இந்த வழக்கின் புகார்தாரர் என் நிறுவனத்தில் வேலை பார்க்கவில்லை என்றால் சரி. அவர் நிறுவனத்தில் முதலீடு செய்திருந்தார். புகார்தாரர் எந்த ஆண்டு முதலீடு செய்திருந்தார் என்றால் வருடம் ஞாபகம் இல்லை, ரூ.6 லட்சம் கொராணா லாக்டவுண் காலத்திற்கு 1 வருடத்திற்கு முன் கொடுத்திருந்தார்.

நான் என் முதல் விசாரணையில் நான் புகார்தாரரின் மனைவியின் வங்கி கணக்கில் மாதாமாதம் பணம் செலுத்தியதாக சொல்வது தற்போது புகார்தாரர் என் தொழில் நிறுவனத்தில் முதலீடு செய்திருந்தார் எனச் சொல்வது முரண்பாடாக உள்ளது என்றால் நாங்கள் முதலில் பணம் செலுத்துவதாக பேசியிருந்தோம். புகார்தாரர் என் மனைவியை தரக்குறைவாக பேசியதால் சிவகாசி காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்ததாக சொல்வது எந்த ஆண்டு என்றால் நினைவில்லை. அந்த காவல் நிலையத்தில் கொடுத்த சிஎஸ்ஆர் இரசீதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் சொன்னதுபோல் அவ்வாறு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் புகார்தாரரிடம் காவல் நிலையத்தில் வெளியே ரூ.3,50,000/– கொடுத்ததாக சொல்வது சிஎஸ்ஆர் தாக்கல் செய்தபின் 25 நாட்களில் என் அலுவலகத்திற்கு வரச்சொல்லி என் அலுவலகத்தில் வைத்து தொகை கொடுத்தேன். நான் ரூ.3,50,000/– தொகை புகார்தாரருக்கு கொடுத்ததாக சொல்வதற்கு புகார்தாரரிடம் ஆவணம் ஏதும் எழுதி வாங்கினேனா என்றால் இல்லை, அப்போது புகார்தாரர் இஸ்ரவேல் கணக்கையும் முடித்தால்தான் இந்த காசோலையை என்னிடம் தருவதாக சொன்னார்.

அதன்பின் தான் புகார்தாரர் தாவா வழக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார் என்றால் சரி. புகார்தாரர் இந்த வழக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்த விபரம் எனக்கு இஸ்ரவேல் வழக்கு தாக்கல் செய்தபின் தான் தெரியும். இஸ்ரவேல் வழக்கு தாக்கல் செய்தபின் நான் இஸ்ரவேலிடம் ரூ.50,000/–ற்கு வங்கி வரைவோலை அனுப்பினேன் என்றால் இல்லை. இஸ்ரவேல் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன் ஒரு கடிதம் எழுதியுள்ளார், அதன்பின் பேசி ஒரு வங்கி வரைவோலை எடுத்துக் கொடுத்தேன். நான் என்னிடம் காட்டப்படும், 04.01.2025 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்புடன் சேர்த்து

– P Beemsingh [signature]

ரூ.50,000/-ற்கு வரைவோலை அனுப்பினேன் என்றால் சரி. அந்த அறிவிப்பில் நான் குறிப்பிட்டுள்ள காசோலை எண்.211253 என்றால் சரி. அந்த சட்ட அறிவிப்பில் நான் மேற்சொன்ன காசோலை எண்.211253 திருப்பி தருமாறு கேட்டுள்ளேன் என்றாலும் இந்த வழக்கில் உள்ள காசோலையை திரும்ப தருமாறு கேட்கவில்லை என்றாலும் சரி. நான் சொன்னதுபோல் புகார்தாரரிடம் பணம் செலுத்தியிருந்தால் புகார்தாரர் இஸ்ரவேலிடம் காசோலை கொடுத்திருப்பார் என்றாலும் நான் அந்த சட்ட அறிவிப்பில் நான் 2 காசோலைகளையும் திரும்ப கேட்டிருப்பேன் என்றாலும் அவ்வாறு தொகை கொடுக்காததால் 2 காசோலைகளையும் திருப்பி கேட்கவில்லை என்றாலும் சரியல்ல.

நான் புகார்தாரரிடம் 10.12.2023 அன்று ரூ.6 லட்சம் கடன் வாங்கியிருந்தேன் என்றாலும் அதற்காக வழக்கு காசோலையை 12.03.2024 அன்று வழங்கியிருந்தேன் என்றாலும் நான் வழக்கு காசோலை தொகை புகார்தாரருக்கு கொடுக்க கடமைப்பட்டவன் என்றாலும் சரியல்ல. நான் புகார்தாரரிடம் ரூ.3,50,000/- மனு இரசீதில் இருந்து 25 நாட்களில் கொடுத்ததாக சொல்வது பொய் என்றாலும் நான் உண்மையில் பணம் கொடுத்திருந்தால் காவல் நிலையத்தில் அந்த விபரம் தெரிவித்து புகார்தாரரிடம் காசோலையை திரும்ப கேட்டிருப்பேன் என்றாலும் சரியல்ல. புகார்தாரரும் இஸ்ரவேலும் நண்பர்கள் என்பதால் இஸ்ரவேல் புகார்தாரரிடம் வழக்கு காசோலையை கொடுத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்று நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் புகார்தாரரிடம் வாங்கிய கடன் ரூ.6 லட்சத்திற்கு வழக்கு காசோலையை வழங்கி அந்த காசோலைக்கான தொகையை செலுத்தாமல் காசோலை மோசடி செய்கிறேன் என்றால் சரியல்ல.

புகார்தாரர் அனுப்பிய சட்ட அறிவிப்பை என் தொழில் நிறுவனத்திற்கு வராததுபோல் நான் திருப்பியுள்ளேன் என்றாலும் நான் எதிரியை மோசடி செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. இஸ்ரவேல் காசோலை திருப்பப்பட்டதாக எனக்கு அனுப்பிய அறிவிப்பை நான் பெற்றுக் கொண்டேன் என்றால் சரியல்ல. நான் அந்த சட்ட அறிவிப்புக்கு பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரியல்ல, அனுப்பினேன். புகார்தாரர் கேட்ட பரிகாரம் புகார்தாரருக்கு கிடைக்ககூடியது என்றால் சரியல்ல.

R Bensiz

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

Rb 2/2/24

நீதித்துறை விரைவு நடுவர்.
திருவில்லிபுத்தூர்.